[30th April 1959

Bee-keeping industry

* 297 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு வசய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவிலே 1958-59-ம் வருடத்தில் தேனி வளர்ப்புத்திட்டத்துக்காக சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே தேனி வளர்ப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன ?

(இ) 1958-ம் வருடக் கடைசி வரைக்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A sum of Rs. 26,000 has been sanctioned for the development of Bee-keeping industry in this State during 1958–59.

(*b*) The schemes are being implemented at Erode, Perundurai, Satyamangalam, Bhavani, Bhavanisagar, Guruvareddiyur, Thuckanaickenpalayam, Kunnathur, Gobichettipalayam, Mettupalayam, Valparai, Coimbatore, Hasanoor, Anthiyur, Perianaickenpalayam, Palladam, Kangayam, Avanashi, Tiruppur and Sulur Blocks.

(*c*) A sum of Rs. 21,020 has been spent up to 31st December 1958.

SRI P. G. MANICKAM : 1958—59-ம் வருடத்தில் எத்தனை ரூபாய் மதிப்புள்ள தேன் சேகரம் செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி என்னிடம் தகவலில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை செலவிட்ட தொகைக்கும், அதிலிருந்து நமக்கு கிடைத்திருக்கக் கூடிய வருமானத்திற்கும், இரண்டையும் வைத்துப் பார்த்தால் ஆதாயத்தில்தான் அந்தப் பண்ணைகள் நடந்து வருகின்றனவா ? அல்லது நஷ்டத்தில் வேலை செய்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேனீ வளர்ப்புத் திட்டத்தைக் கேவலம் ஒரு வியாபார ரூபத்தில் நடத்தவில்லை. தேனீ வளர்ப்பிற்கு ஆதரவு அளிக்க வேண்டும். ஆயிரம் பீ ஹைவ்ஸ் இந்த இலாகா மூலம் சப்ஸிடைஸ்ட் காஸ்டில் கொடுப்பட்டிருக்கிறது. இதில் மக்களுக்கு ஒரு ஆர்வம் இருக்க வேண்டும். 272 பீ காலனீஸ் இப்பொழுது நடைபெற்று வருகிறது. 458 பவுண்டு தான் உற்பத்தியாகிறது. இதில் லாப நஷ்டம் பார்ப்பதிற்கில்லை. அநேகம் பேர்களுக்கு இதில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

Drinking water supply schemes

* 298 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நகர குடிநீர் வசதிக்காக 1958–59-ம் வருடத்திய பட்ஜெட் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து எந்தெந்த நகரங்களிலே குடி தண்ணீர் சப்ளைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப் பட்டன ?

30th April 1959]

(ஆ) எந்தெந்த திட்டங்களுக்கு எவ்வளவு தொகை சாங்ஷன் செய்யப் பட்டது.

(இ) ஒதுக்கப்பட்ட பட்ஜெட் நிதியிலிருந்து 1958–59-ம் வருடத்திலே எத்தனை திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) A statement [a] showing the schemes under execution and the loans and grants sanctioned for them from 1st April 1958 to 1st March 1959 is placed on the table of the House.

(c) The Cuddalore water-supply improvements scheme and the Tindivanam Water-Supply Scheme have been brought into beneficial use. The Arcot and Ranipet Water-Supply Scheme, the Arni Water-Supply Scheme and the Coonoor Water-Supply improvements scheme are expected to be completed in 1958–59.

SRI P. G. MANICKAM : மேற்குறித்த 25 வாட்டர் சப்ளை ஸ்கீம்களில் ஆறு ஸ்கீம்களுக்குமாத்திரம் சர்க்கார் உதவித்தொகை கொடுக் கப்பட்டிருக்கிறது. இந்த வாட்டர் சப்ளை ஸ்கீம்களுக்கு அவர்கள் சர்க்காரிடம் உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கவில்லையா ? அப்படி விண்ணப் பிக்கப்பட்டிருப்பின் அவைகள் ஏன் கவனிக்கப்படவில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சில இடங்களில் வெறும் கடன்தான் கேட்டார்கள். சில ஸ்தலங்களில் கிருண்ட் எல்லோருக் கும் வேண்டுமென்றுகேட்டிருப்பார்கள். எந்தெந்த சந்தர்ப்பங்களில் யார் யாருக்கு கிருண்ட் கொடுக்க முடியுமோ அல்லது லோன் கொடுக்க முடி யுமோ அந்த வகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR : சங்கரன் கோவில் குடி தண்ணீர்த் திட்டம் சம்பந்தமாக ஒரு மகஜர் கொடுக்கப்பட்டது. அதற்கு உதவித் தொகை கொடுப்பதற்கு, மனு கொடுத்திருக்கிறார்கள். அது இந்த வருடத்தில் எடுத்துக் கொள்வது பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

MR. SPEAKER : அது இந்த லிஸ்டில் இல்லையே.

SRI A. R. SUBBIAH MUDALIAR : அது லிஸ்டில் இல்லாத தினால்தான் சப்ளிமெண்டரி கேட்கிறேன்.

MR. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர் ஜில்லா வைப் பற்றி கேட்டால் எப்படி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும். If the Hon. Minister wants to reply, I have no objection.

THE HON. SRI M. A. MANICKAVELU : சரி, சொல்லுகிறேன். (சிரிப்பு) செலவினங்கள் எல்லாம் எந்தளவிற்கு பஞ்சாயத்தினால் சமாளிக்க முடியும் என்ற விஷயங்கள் எல்லாம் கடிதக் போக்குவரத்தில் இருக்கிறது. பின்பு அதைப் பரிசிலனை செய்யலாம்.

SRI V. SANKARAN : மதுரை வாட்டர் சப்ளை இம்ப்ரூவ் மெண்ட் சம்பந்தமாக 6,80,000 ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. மதுரை குடி தண்ணீர் அபிவிருத்தி சம்பந்தமாக மொத்தம் எவ்வளவு ரூபாய்க்குத் திட்டம் போடப் பட்டிருக்கிறது ? வைகைத் திட்டம் போன்ற

---

a Printed as Appendix X on pages 811—812 infra.

[30th April 1959

திட்டங்கள் எப்பொழுது மூடிவடையும்? எவ்வளவு ரூபாய்க்கு திட்டம் போடப் பட்டிருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : பெரியாறு திட்டத்தில் இது ஒரு கட்டம். மற்ற கட்டங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வரும்.

Export of handloom cloth

*** 299 Q.—SRI A. VEDARATHNAM** : கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலிருந்து வெளி நாடுகளுக்கு எவ்வளவு கைத்தறித்துணி எந்தெந்த நாடுகளுக்கு நடப்பு வருடத்தில் ஏற்றுமதியாகி இருக்கிறது?

(ஆ) இந்த ஏற்றுமதியை அதிகரிக்க என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The answer [a] is printed and placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்த கைத்தறித் துணிகள் இங்கிலாந்த், கானடா போன்ற நாடுகளில் இப்பொழுது குறைந்திருக்கிறது. வேறு எந்த நாட்டுத் துணிகள் இதை ஸப்ஸ்ட்யூட் செய்திருக்கிறது? "பிஜி" போன்ற நாடுகளில் இந்தியர்கள் ஏராளமாக இருக்கிறார்களே, அங்கு நமது கைத்தறித் துணிகளை அனுப்பினால் நல்லதல்லவா? அப்படி அங்கு அனுப்புவதற்கு முயற்சி எதுவும் எடுத்திருப்பதாக இந்த ஸ்டேட்மெண்டில் காணவில்லையே! ஆகவே, அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்க சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகத்தான் இப்பொழுது ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனில் இருந்து ஒரு உப கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அதற்கு சென்னையில் ஆபீஸ்-ம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த நாடுகளில் கைத்தறிக்கு அதிகம் கிராக்கி இருக்கிறதென்று நினைக்கிறோமோ அந்த நாடுகளுக்குத்தான் அனுப்ப முடியும். கனம் அங்கத்தினர் இங்கிலாந்து, கானடா போன்ற யிடங்களில் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். ட்ரெடிஷனல் மார்கெட் ஆகிய பர்மா, மலேயா போன்ற நாடுகளில் கூட முன்பு விற்றுக் கொண்டிருந்ததை விட இப்போது குறைவாக இருக்கிறது. அதைச் சமாளிப்பதற்கும் கூடுதல் ஏற்றுமதி செய்யும் வழிவகைகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : வெளி மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய துணிகளுக்கு சேல்ஸ் எம்போரியம் சில சொஸைட்டிகளுக்கு ஆர்டர் கொடுத்து வாங்கி அவைகளுக்கு செலவு இல்லாமல் இருப்பதால் பல ஸொஸைட்டிகள் லட்சக்கணக்காக ரூபாய் பெறுமானமுள்ள துணிகளை தயாரித்து அவைகளை இன்று நடத்த முடியாமல் இருக்கக் கூடிய அளவிற்கு பல ஸொஸைட்டிகள் இருக்கின்றன, சேலத்தில். ஆகவே, அதை சேல்ஸ் எம்போரியம் மூலம் வாங்கி இந்த சொஸைட்டிகள் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

MR. SPEAKER : கேள்வி, 'பாரின்' மார்க்கெட்டைப்பற்றியது. The question is out of order.

---

[a] Printed as Appendix XI on pages 812—814 infra.